படுகிறது. இது தவிர மிகத் தீவிர முறை இறால் வளர்ப்போருக்கு ''இன்டென்சிவ் கல்சர்'' என்று சொல்லக் கூடிய மிகத் தீவிர முறை இறால் வளர்ப்போருக்கு 10 எக்டேர் வரையிலும் மானியம் வழங்கப்படுகிறது. அதோடு மட்டுமல்லாமல் தேவையான அளவுக்கு தொழில் நுட்பம் தந்தும் உதவுகிறோம். அந்த வகையில் அந்த உதவிகளை எல்லாம் பெற்று நம் நாட்டிற்கு அன்னியச் செலாவணி ஈட்டித் தருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 80, திரு. வி. ரவிச்சந்திரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

80—

துறையூரில் சாலையோர விடுதி.

*19119—திரு. வி. ரவிச்சந்திரன் :

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், துறையூரில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலமாக சாலையோர விடுதி (Hotel) அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை. இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சிக் காலத்தில் உப்பிலியாபுரம் தொகுதியில் துறையூரில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலமாக சாலையோர, விடுதி, ''மோட்டல்'' அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என அமைச்சர் அவர்களிடம் கேட்டேன். அவர் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இந்தக் கேள்வி போடும் போது, இந்த டிப்பார்ட்மெண்ட் மாண்புமிகு இதயதெய்வம்

1993 அக்டோபர் 29]

புரட்சித் தலைவி அவர்களிடம் இருந்தது. அவர்களிடமே இருந்திருந்தால், அவர்கள் கொடுத்திருப்பார்கள் என்று நான் எதிர் பார்க்கிறேன். அறிவுக்கு வேலை கொடு, பகுத்தறிவுக்கு வேலை கொடு, மூடப் பழக்கத்தை விட்டு விடு, காலம் மாறுது, கருத்தும் மாறுது, நாமும் மாற வேண்டும் நம்மால் நாடு மாற வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். சிட்டுக் குருவிக்கென கட்டுப்பாடு தென்றலே உனக்கு என்ன சொந்த வீடு உலகம் முழுவதும் பறந்து பறந்து ஊர்வலம் சென்று விளையாடு என்று மாண்புமிகு...........

முற்பகல் 11-10.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துறையூரில் மோட்டல் ஒன்று அமைக்க வேண்டும். அது தவிர யாரிடத்திலே துறை இருந்தாலும் அத்தனையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர் களிடத்திலே இருப்பதாகத்தான் பொருள். (மேசையைத் தட்டும் ஒலி) கேளுங்கள்.

திரு. வி. ரவிச்சந்திரன் : சுற்றுலாப் பயணிகள் உப்பிலியா புரம் தொகுதிக்கு அதிகமாக வந்து கொண்டிருக்கிறார்கள். உணவு மற்றும் தேநீர் போன்றவை அருந்திச் செல்வதற்கு மோட்டல் இல்லை. சுற்றுலா வளர்ச்சிக் கழகமோ அல்லது தனியார் முன் வருவார்களேயானால் சுற்றுலாத் துறை உதவ முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் துறையிலே இரண்டு ஆண்டுக் காலம் அவர்களுடைய ஆற்றல் திறனாலும் சீரிய சிந்தனையாலும் சுற்றுலாவில் புதிய தொழில் கொள்கையை உருவாக்கி இந்தத் துறைக்கு தந்திருக்கிறார்கள். இந்த நாட்டுக்கு அர்ப்பணித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட புதிய சுற்றுலா தொழில் கொள்கையின் மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே மிக அவசரமாக தேவை ஏற்படுமேயானால் தனி நபர் முன் வருவார்களேயானால் அதற்குரிய உதவியை இந்த அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்று கூறியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் திருச்சி மாவட்டத்தில் முக்கொம்பு, கல்லணை போன்ற முக்கியமான ஸ்தலங்கள் இருப்பதால் யாத்ரீகர்கள் தங்கும் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடவும்.